உ

அம்பாள் துணை

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## தெல்லிப்பழை

# பதினேழாவது ஆண்டு அறிக்கை

**( 01-01-98 — 31-12-98 வரை )**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையினால் 03-02-1982 இல் ஸ்தாபிக்கப்பெற்ற துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் பதினேழாவது ஆண்டு அறிக்கையையும், பட்டயக் கணக்காய்வாளர் ஸ்தாபனத்தினரால் எண் பார்வை செய்யப்பட்ட 1998 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுக் கணக்கையும் பொதுமக்கள் அறிவதற்குச் சமர்ப்பிப்பதில் எமது நிர்வாகசபை மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது.

இவ்வில்லத்தில் 1998 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 55 பிள்ளைகள் இடம் பெற்றனர். இவர்களுடன் மேற்பார்வையாளர்கள், விவாகமாகாத தனிப்பட்ட பெண்கள், விதவைப் பெண்கள், சிற்றூழியர்கள். ஆகிய 9 பேர் இடம் பெற்றிருந்தனர். இல்லப் பெண்பிள்ளைகள் யாழ் மாவட்டம் வன்னிமாவட்டம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாவர். இவர்களில் 24 பேர் தாய் தந்தை இருவரையும் இழந்தவர்களாவர், இருபது வயதுக்கு மேற்பட்ட ஐந்துபேரும் பத்துவயதுக்குக் கீழ்ப்பட்ட இரண்டு பேரும் தமது உறவினரின் விருப்பத்தின் பேரில் இல்லத்தை விட்டு விலகினர். பத்து வயதுக்குக் கீழ்ப்பட்ட 7 பிள்ளைகள் இவ்வாண்டு புதிதாகச் சேர்க்கப்பட்டனர். வருட இறுதியில் 54 பேர் இல்லத்தில் இடம் பெற்றனர். திருமதி தேவி சிவபாலசிங்கம் என்பவர் இவ்வருடம் இல்லப்பணிகளுக்காகச் சேர்க்கப்பட்டார்.

**அரசாங்கப் பதிவு :**

இம்மகளிர் இல்லம் அரசாங்க சட்டத்தின் பிரகாரம் 23-09-1988 இல் நன்னடத்தைப் பாதுகாவலர் சிறுவர் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டது. இப்பதி வின் பிரகாரம் துர்க்காபுரம் மகளிர் இல்லம் அரசாங்க அங்கீகாரம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**கல்வி :**

இல்லப்பிள்ளைகளில் இருவர் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தில் மூன்றாம் ஆண்டில் கல்வி கற்று வரு கின்றனர். ஒருவர் யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தில் மூன்றாம் ஆண்டில் கல்விகற்று வருகிறார். G. C. E. (A / L) வகுப்பில் 6 மாணவிகள் கல்வி கற்று வருகின்றனர். இவ்வருடம் மார்கழிமாதத்தில் நடைபெற்ற G. C. E (O/L) பரீட்சையில் 6 மாணவிகள் தோற்றி திறமையான சித்திகளைப் பெற்று G. C. E (A/L) வகுப் பில் கல்வி கற்கத் தகுதி பெற்றுள்ளனர்.

பாடசாலை மட்டத்திலும், வலயமட்டத்திலும் இல்லப் பிள்ளைகள் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றனர். செல்வி து துஷ்யந்தி உறுப்பெழுத்துப் போட்டியில் முதலாம் இடத்தையும், செல்வி பா. பாலரஞ்சினி திருக்குறள் மனனப்போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்றனர்.

செல்வி செ. செல்வமனோகரி, செல்வி இ. கோகிலா, செல்வி ம. சுமித்திரா ஆகியோர் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையில் விசேட சித்தி பெற்றனர்

சேர். பொன். இராமநாதன் அவர்களின் நினைவு தினப் பேச்சுப் போட்டியில் செல்வி கு. சர்மிளா முதலா மிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண் டார். இதே போட்டியில் கீழ்ப்பிரிவில் செல்வி இ. கோகிலா முதலாமிடத்துக்குரிய தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

வட இலங்கை சங்கீத சபை நடாத்திய பரீட்சையில் பன்னிரண்டுபேர் சித்தி பெற்றனர்.

மாலைகட்டுதல், கோலம் போடுதல் ஆகிய போட்டி களில் செல்வி பா. சுபாஜினி, செல்வி கு. குணநிதி, செல்வி யோ. யோகமாலா ஆகியோர் முதலாம் இடத்தைப் பெற்றனர்.

செல்வி ஸ்ரீ. கலைவதனி கோட்ட மட்டத்திலும், வலய மட்டத்திலும் கதாப்பிரசங்கம், புராண படனம், திருக்குறள் மனனம், சேர். பொன். இராமநாதன் நினைவு தினக் கட்டுரை ஆகியவற்றில் முதலாமிடத்தைப் பெற் றார். இராமநாதன் கல்லூரி வலைப்பந்தாட்டப் போட்டி யிலும் தலைமை தாங்கி முதலிடத்தைப் பெற்றுக் கொடுத்தமை செல்வி ஸ்ரீ. கலைவதனியின் விளையாட் டுத் துறை வெற்றிக்கு ஒரு சான்றாகும். அத்துடன் வலய மட்டத்தில் நடைபெற்ற ஓட்டப் போட்டிகளிலும் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

***பாஓதல் போட்டி :***

தமிழ்த்தின விழாவை ஒட்டி நடைபெற்ற 'பாஓதல்' போட்டியில் கோட்டம், வலயம், மாவட்டம் என்பவற்றில் முதலாமிடத்தைப் பெற்று வடக்கு கிழக்கு மாகாண சபையால் திருகோணமலையில் நடாத்தப்பட்ட மாகாண சபைப் போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்று திறமையாக விளங்கிய ஸ்ரீ கலைவதனி அவர்கள் அகில இலங்கை ரீதியாக கொழும்பில் நடைபெற்ற போட்டி யிலும் மூன்றாம் இடத்தைப் பெற்றமையும் மகிழ்ச்சி யுடன் தெரிவித்தலுக்கு உரியதாகும்.

***தொழில் வாய்ப்புப் பெற்ற மகளிர் இல்லப் பிள்ளைகள் :***

செல்வி சு. சுகந்தினி, செல்வி யோ. யோகமாலா, செல்வி ஆ. ஜெயசுதா, செல்வி செ. நாகராணி, செல்வி எஸ். பூமலர் ஆகியோர் இல்லப் பிள்ளைகளின் உணவு,

உடை ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருந்து பணி யாற்றுகின்றனர். திருமதி இராஜேஸ்வரி பரமானந்தம், செல்வி கா. கந்தையா, செல்வி செ. பெரியதம்பி, அருட் சகோதரி ஜதீஸ்வரி, ஆகியோர் உதவியாக இருந்து பணி புரிகின்றனர். செல்வி த. மஞ்சுளா அவர்கள் அலுவலகப் பணியில் முன்னின்று உதவி வருகின்றார் என்பது குறிப் பிடத்தக்கது.

செல்வி த. தவனேஸ்வரி, செல்வி வி. வடிவாம்பிகை பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்குதவி வருகின்றனர். திரு. சி. அருளானந்தசிவம் அவர்கள் ஆங்கிலம் கற்பிப் பதிலும் திரு. மு. சுப்பிரமணியம் அவர்கள் கணிதம் கற்பித்தலிலும் உறுதுணையாக இருந்து பணி புரி கின்றனர்.

செல்வி ஆ. ஜெயசுதா, செல்வி செ. நாகராணி ஆகி யோர் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் பணி செய்வ தோடு இல்லக் கடமைகளையும் நிறைவேற்றி வருகின்ற னர்.

செல்வி ச. ரேவதி ஐந்தாம் வகுப்புக்குட்பட்ட இல்லப் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பதோடு, இல்லத்தின் வரவு செலவுக் கணக்குகளையும் கண்காணித்து அறிக்கை யில் பதிந்து உதவுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**பதினேழாவது ஆண்டுவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும்:**

**துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் பதினேழாம்** ஆண்டு நிறைவை முன்னிட்டு பரிசளிப்பு விழா 15-02-1999இல் நடைபெற்றது. இவ்விழாவிற்கு வைத்திய கலாநிதி திரு. ந. சிவராஜா அவர்கள் முதன்மை விருந் தினராகக் கலந்து கொண்டார். திருமதி மலையரசி சிவ ராஜா அவர்கள் பரிசில் வழங்குவதற்கு கௌரவ விருந் தினராக வருகை தந்து சிறப்பித்தார். காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 1-00 மணி வரை இவ்விழா நடை பெற்றது. இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடை

பெற்ற இவ்விழாவில் கோட்டப் பணிப்பாளர்களும், இராம நாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு வாழ்த்துரைகள் வழங்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பிள்ளைகளின் திறமைகள் குறித்து பரிசில்கள் வழங்கப் பட்டன. இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அடுத்து வருகை தந்த அனைவருக்கும் மதிய போசனம் வழங்கப்பட்டது. இவ் விழாவில் பரி சளிப்பு விழா பற்றிய அறிக்கை வெளியிடப்பட்டது.

***இல்ல நிதி :***

மகளிர் இல்லப் பராமரிப்புக்கு உள்ளூர், வெளியூர் அன்பர்கள் திருமணம், பிறந்த நாள், நினைவு நாள் ஆகியவற்றை முன்னிட்டு இல்லப் பிள்ளைகளுக்கு உணவு, உடை ஆகியவற்றை வழங்கி ஆதரவு நல்குகின் றனர். வெளிநாட்டு அறநிலையங்கள் எமது இல்லப் பணி களுக்கு கூடிய அக்கறை செலுத்தி வருவது மிகவும் நன்றியோடு பாராட்டுதற்குரியதாகும்.

1. அமெரிக்கா தமிழர் ஆதார நிறுவனத் தலைவர் DR. N. A. இரஞ்சிதன் அவர்கள்
2. அவுஸ்திரேலியா ‘ அபயகரம் ’ நிறுவனத் தலைவர் திரு. R. சிவானந்தன் அவர்கள்
3. இலண்டன் உயர்வாசல் குன்று முருகன் ஆலயம்
4. பிரித்தானியா ‘ ஸ்கொட் ’ நிறுவனம் செல்வி எஸ். பத்மாசனி தலைமையில்
5. சுவீடன் சொலெத்தியோ தமிழ்ச் சங்கம்
6. இலண்டன் பல்கலைக்கழக மாணவர்கள் ‘ கல்லூரிப் பூக்கள் ’ மாணவர் ஒன்றியம் திரு. வி. சிவசுதன் தலைமையில்
7. இலண்டன் தமிழ் அநாதைகள் நம்பிக்கை நிதியம்

8. அவுஸ்திரேலியா ஈழத்தமிழர் நிதியம்

9. வைத்தியகலாநிதி திரு. திருமதி கனகசபை— யாழ்ப் பாணம்

10. மாவிட்டபுரம் வீணியவரையைச் சேர்ந்தவரும் தற்போது கொழும்பில் வசித்து வருபவருமாகிய திரு. பொ. பாலசுந்தரம் அவர்கள்

11. திருமதி இரத்தினேஸ்வரி சுப்பிரமணியம் நினைவு நிதி – அமெரிக்கா

12. சுவிற்சலாந்து ஸ்ரீ சத்தியசாயி மண்டலியைச்சேர்ந்த அன்பர்களின் ஆதரவில் திரு கந்தசாமி பத்மநேசன் அவர்களால் அனுப்பப்பட்ட நிதி

13. திருமதி சேதா சண்முகசோதி – அவுஸ்கிரேலியா

14. அன்னை அகம் மழலைகள் பராமரிப்பகம் – கனடா

15. கன்பரா தமிழ்ச்சங்கம் - அவுஸ்திரேலியா

16. அகில இலங்கை இந்துமாமன்றம் - கொழும்பு

17. பகாமாஸ் தீவில் பணிபுரியும் வைத்தியகலாநிதி, திரு. க. இராஜசூரியர் அவர்கள்

18. கொழும்பு பாமன்கடைலேனைச் சேர்ந்த வைத்திய கலாநிதி திரு. செ. சிவலிங்கம் அவர்கள்

19. ஈழநாடு ஸ்தாபகர் திரு. கே. சி. தங்கராசா அவர்கள் ஞாபகார்த்த நிதியம் கொழும்பு.

மேற்காட்டிய நிறுவனங்களும், மற்றும் நலன் விரும்பிகளும், கொழும்பு மாநகரில் வதியும் தாராளசிந்தை உடையோரும், யாழ்ப்பாணத்திலும் ஈழத்தின் பல பாகங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் அறக்கொடையாளர்களும் இவ்வில்லத்துக்கு தம்மாலான ஒத்துழைப்பை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

**அன்னதானம் :**

செவ்வாய்க்கிழமைகளிலும், விசேட தினங்களிலும், மகோற்சவ காலங்களிலும் துர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் அன்னதான நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் மகோற்சவ தினங்களில் 25 நாட்களும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் அன்னதானம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். இதற்கெல்லாம் அரிசியாகவும் மற்றும் பொருட்களாகவும் பணமாகவும் மனமுவந்து வழங்கும் யாழ் குடாநாட்டு வர்த்தகப் பெருமக்களை நாம் மனமாரப் பாராட்டுகிறோம். ஆலயங்களிலும் மற்றும் பொது மண்டபங்களிலும் அன்னதானப் பணியை சிறப்பாக நிறைவேற்றுகின்ற கடமை அனைவருக்கும் உண்டு என்ற எண்ணத்தை துர்க்காதேவி தேவஸ்தானம் நன்கு நிறைவேற்றி வருகிறது. மகோற்சவகால அன்னதானப்பணியைச் செம்மையாக நிறைவேற்றப் பூரணமான ஒத்துழைப்பை நல்கி அரிசி மற்றும் பணம் ஆகியவற்றை வர்த்தகப் பெருமக்களிடம் பெற்றுத்தரும் திருமகள் அழுத்தக முகாமையாளர் திரு. ச. இராசரத்தினம் அவர்களைப்பாராட்டி நன்றி கூறுகிறோம்.

**நல்லூர் உற்சவகால**
**விசேட நிகழ்ச்சிகள் :**

இந்த நாட்களில் தினமும் மாலை 6-00 மணி தொடக்கம் 7-00 மணிவரை பக்திப்பாடல் இசை நிகழ்ச்சி திரு. எஸ். பத்மலிங்கம் அவர்களின் தலைமையில் இசை வல்லார்களால் நிகழ்த்தப்பட்டது. 28-07-1998 தொடக்கம் 22-08-1998 வரை இந்நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றன. நல்லூர் விசேட உற்சவ தினங்களில் தண்ணீர்ப் பந்தல் அறப்பணியும் திருமதி. விசாலாம்பாள் அரியகுட்டி அவர்களுடைய உபயமாக நடைபெற்றது. 20-08-1998 இல் நல்லூர்க் கந்தனின் தேர் உற்சவ நாளில் ஏறக்குறைய ஐயாயிரம் அடியார்கள் மணிமண்டபத்தில் நடைபெற்ற அன்னதானத்தில் பங்கு பற்றினர்.

27-09-1998 ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மணிமண்டபத்தில் நவராத்திரி விழா நடைபெற்றது. மகளிர் இல்லப் பிள்ளைகளின் தீபாவலி நிகழ்ச்சிகள் 18-10-1998 ஞாயிற்றுக்கிழமை இலங்கை வானொலியில் அஞ்சல் செய்யப்பட்டது. 21-10-1998 தொடக்கம் 27-10-1998 வரை மணிமண்டபத்தில் 'கந்தசஷ்டி விசேட சொற்பொழிவு' பிரசங்கவாரிதி. வ. குமாரசுவாமி ஐயா அவர்களினால் நிகழ்த்தப்பட்டது. தினமும் மகளிர் இல்லப் பிள்ளைகளின் கூட்டு வழிபாடும் இங்கு இடம் பெற்றது. 09-12-1998 புதன் மணிமண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூசை இடம்பெற்றது. யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி. சி. சிவலிங்கராஜா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். துர்க்காபுரம் மகளிர் இல்லப்பணிகளோடு இணைந்து செயற்படும் நல்லூர் மணிமண்டப நிகழ்வுகள் மேலும் மேலும் சிறப்படைய வேண்டும் என்றும் எல்லாம் வல்ல நல்லைக் கந்தனையும் துர்க்காதேவியையும் பிரார்த்திக்கிறோம்.

**நன்றி கூறுகிறோம்** :

"நன்றி மறப்பது நன்றன்று" என்ற வாக்குக்கு ஏற்ப இவ்வில்லத்தின் வளர்ச்சியில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுவது எமது தலையாய கடனாகும்.

1. நல்லூர் மணிமண்டப பணிகளுக்கு பொறுப்பாக இருந்து அவ்வப்போது கண்ணியமாக கடமையாற்றிக் கொண்டு இருக்கும் திரு. வி. கமலநாதன் அவர்கள், திரு. சி. சண்முகானந்தம் அவர்கள், திரு. செ. கதிர்காமநாதன் அவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

2. மகளிர் இல்லப் பிள்ளைகளுக்கு வைத்திய உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கும் வைத்திய கலாநிதி ம. மகேசன் அவர்கள் (உடுவில்) வைத்திய கலாநிதி க. ஈஸ்வரி அவர்கள்.

3. நடனம், நாட்டிய நாடகம் ஆகியவற்றிலே பயிற்சி அளித்து மேடையேற்றிப் பரிசுபெற வைக்கும் ஆசிரியை திருமதி நந்தினி சிவராஜன் அவர்கள்.

4. காலமும் நேரமும் அறிந்து எமது செய்திகளை இந்நாட்டுச் செய்தித் தாள்களான உதயனிலும் மற்றும் தினக்குரல், தினகரன், வீரகேசரி ஆகிய தினசரிகளிலும் பிரசுரித்து உதவும் பத்திரிகைத் துறையினர்.

5. கடிதத் தொடர்புகள், அச்சகப் பணிகளை ஒப்பு நோக்கல், வங்கி வைப்புக்கள், அன்பளிப்புக்கான பற்றுச் சீட்டுக்களைப் பதிந்து அனுப்புதல் ஆகிய பணிகளைச் செம்மையாக நிறைவேற்றித் தரும் திரு கா. சிவபாலன் அவர்கள்.

6. மகளிர் இல்ல அச்சுப் பணிகளை நல்லபடி நிறைவேற்றித் தரும் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினர்.

ஆகியோருக்கு எமது நன்றி உரித்தாகுக.

"நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பரமர்க் கங்காமே"

என்பதை நினைவில் இருத்தி மக்கள் பணியை மகேசன் பணியாக நினைத்து ஆவன செய்வோமாக.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P.
தலைவர்

திரு. அ. சண்முகநாதன்
பொருளாளர்

திருமதி ம. இராமநாதர்
திரு. நா. தவநாதன்
செயலாளர்

நிர்வாகசபை,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்,
தெல்லிப்பழை.

அன்புடையீர்,

# 1998ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதி முடிவுற்றாண்டிற்கான கணக்காய்வறிக்கை

மேற்படி இல்லத்தின் நிதி நடவடிக்கைகளின் கணக்காய்வினை மேற்கொண்டு பின்வருவனவற்றைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

1. **பொது நிதி 7242733/52**

*01-01-1998இல் ரூபா 5265201/65 இருந்தது. இவ்வருடம் வருமானச் செலவுக் கணக்கு மீதியாக ரூபா 1977531/87 சேர்க்கப்பட்டு இவ்வருட மீதியாக ரூபா 7242733/52 உள்ளது.*

2. **அறக்கட்டளை நிதி 1999000/-**

*01-01-1998இல் மீதியாக ரூபா .1769000/- இருந்தது. இவ்வருடம் அன்பளிப்பாக ரூபா 230000/- பெறப்பட்டு உள்ளது. இவ்வருட மீதியாக ரூபா 1999000/- உள்ளது. இத்தொகையில் ரூபா 130000/- மட்டும் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. மீதி 100000/- அடுத்த நிதி வருடத்தில் வைப்புச் செய்யப்படும்.*

3. **நிலையான சொத்துக்கள் 4230916/54**

*01-01-1998இல் ரூபா 576229/63 இருந்தது. சென்ற வருடம் நல்லூர் திருப்பணியாகக் காட்டப்பட்ட மணிமண்டப அமைப்பு இவ்வருடம் பூர்த்தியடைந்த காரணத்தினால் சொத்தாகக் காட்டப்பட்டுள்ளது. சென்ற வருடம் மணிமண்டப மீதியாக ரூபா 1513264/50 இருந்தது. இவ்வருடம் சொத்தாக ரூபா 3830032/- சேர்க்கப்பட்டு 9 மாதங்கட்குப் பெறுமானத்தேய்வும் கணிக்கப்பட்டுள்ளது.*

*இவ்வருடம் மொத்தச் சொத்துச் சேர்வாக 4003777/- சேர்க்கப்பட்டுள்ளது. பெறுமானத் தேய்வாக ரூபா 343090/09 கழிக்கப்பட்டும் இவ்வருட மீதியாக ரூபா 4230916/54 உள்ளது.*

**நல்லூர்த் திருப்பணி**

திருமதி வி. அரியகுட்டி அம்மா அவர்களால் தேவஸ்தானத்திற்கு வழங்கப்பட்ட அன்பளிப்பில் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் திருமணம், கலை இலக்கிய சமய நிகழ்வுகளை நடாத்துவதற்காக இல்லத்தின் சார்பில் மணிமண்டபம் அமைப்பதற்கு சென்ற வருடம் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு சென்ற வருடம் முடிவுறாமையால் திருப்பணிச் செலவாகக் கணக்கிடப்பட்டது. இவ்வருடப்பகுதியில் முடிவுற்றது.

| | |
|---|---|
| இவ்வருட மணிமண்டபத் திருப்பணிச் செலவு | 2785307-71 |
| சென்ற வருட திருப்பணிச் செலவாகக் கணக்கிடப்பட்டது | 1513264-50 |
| | 4298572-21 |
| இவ்வருடம் மணிமண்டப திறப்பு விழா பாரமரிப்புச் செலவு முதலியன வருமானச் செலவுக் கணக்கில் கணக்கிடப்பட்ட தொகை | (294795-21) |

குறிப்பு 07

சொத்தாகச் சேர்க்கப்பட்ட தொகை

| | | |
|---|---|---|
| நீர் இறைக்கும் இயந்திரம் | 27000- | |
| தளபாடம் | 55310- | |
| சமையலறை பாத்திரங்கள் | 91435- | |
| மணிமண்டபம் | 3830032- | |
| | | 4003777-00 |

**நிலையான சேமிப்பு வைப்புக்கள் 4454184/56**

வர்த்தக வங்கி யாழ். கிளையில் பொது நிதி வைப்பாக 01-01-98 இல் ரூபா 500000/- இருந்தது, அத்துடன் அறக்கட்டளை நிதி வைப்பாக சென்ற வருடம் ரூபா 296000/- இருந்தது, இவ்வருடம் ரூபா 796000/- மீதியாக உள்ளது.

தேசிய சேமிப்பு வங்கி, யாழ். கிளையில் அறக்கட்டளை நிதி வைப்பாக சென்ற வருட மீதி ரூபா 685000/- இருந்தது. இவ்வருடம் 130000/- வைப்பிலிடப்பட்டும் வட்டியாக ரூபா 87865-45 ஆம் சேர்க்கப்பட்டும் இவ்வருட மீதியாக 902865/45 ஆம் உள்ளது.

தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் கிளையில் பொதுநிதி வைப்பாக சென்ற வருட மீதி ரூபா 500000/- இருந்தது. இவ்

வருடமும் இத்தொகையே மீதியாகவுள்ளதுடன் அறக்கட்டளை நிதி வைப்பாக சென்ற வருட மீதியான ரூபா 402000/- வுமாக இவ்வருட மீதியாக ரூபா 902000/- உள்ளது.

இலங்கை வங்கி சுன்னாகம் கிளையில் பொது நிதி வைப்பாக சென்ற வருட மீதியான ரூபா 600000/ வும் அறக்கட்டளை நிதி வைப்பாக சென்ற வருட மீதியான ரூபா 136000/- வுமாக இவ் வருட மீதியாக ரூபா 736000/- உள்ளது.

இலங்கை வங்கி, பம்பலப்பிட்டி கிளையில் பொது நிதி வைப் பாக சென்ற வருட மீதியான ரூபா 350000/- இவ்வருடமும் மீதி யாகவுள்ளது.

மக்கள் வங்கி, சுன்னாகம், காங்கேசன்துறை கிளைகளில் தலா ரூபா 100000/- வீதம் அறக்கட்டளை நிதி வைப்பாக சென்ற வருட மீதியே இவ்வருடமும் மீதியாக உள்ளது.

**தேசிய சேமிப்பு வங்கி, யாழ். க/கு இல. 769இல்**

| | | |
|---|---|---|
| 01-01-1998 மீதி | ரூபா | 204165-41 |
| இவ்வருட வட்டி | | 9043-00 |
| | | 213208-49 |
| மீளெடுப்பு | | (150000-00) |
| | | 63208-49 |

**தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் கிளையில் க/கு இல. 1015இல்**

| | | |
|---|---|---|
| 01-01-1998இல் மீதி | ரூபா | 33986-51 |
| இவ்வருட வட்டி | | 3414-99 |
| | | 37401-50 |

**தேசிய சேமிப்பு வங்கி வெள்ளவத்தைக் கிளையில் க/கு இல. 1033இல்.**

| | | |
|---|---|---|
| 01-01-1998இல் மீதி | ரூபா | 410000-00 |
| வட்டி | | — |
| வைப்பு | | — |
| | | 410000-00 |

**வர்த்தக வங்கி யாழ் கிளையில் க/கு இல. பி. எஸ். 1இல்.**

| | | |
|---|---|---|
| 01-01-1998இல் மீதி | ரூபா | 149049-61 |
| வட்டி | | 7659-51 |
| | | 156709-12 |
| மீளெடுப்பு | | (100000-00) |
| | | 56709-12 |

மேற்குறிப்பிட்ட சேமிப்புக் கணக்குகளான 769, 1015 பி. எஸ். 1 என்பனவற்றிற்கு வட்டி கணிப்பிடப்பட்டுச் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால், க/கு இலக்கம் 1033ற்கு வட்டி வங்கியினால் கணிக்கப்படவில்லை. இதனால் கணக்கில் சேர்க்கப்படவில்லை. அடுத்த நிதி வருடத்தில் சேர்க்கப்படவுள்ளது.

**நடைமுறை வைப்புக்கள் ரூபா 430523/36**

இலங்கை வங்கி, சுன்னாகக் கிளையில் க/கு இலக்கம் 4923இல் ரூபா 71298-56ம், பம்பலப்பிட்டி கிளையில் க/கு. இல. 0037-01-0004020-4இல் ரூபா 377642/30ம், வர்த்தக வங்கி, யாழ். கிளையில் க/கு. இல. 12977இல் ரூபா 69481/66ம் உள்ளது.

**கையிருப்பு ரூபா 38209/50**

மேற்படி கையிருப்பு தொகை 01-01-99 இல் பரிசீலிக்கப்பட்டபோது குறிப்பிட்ட தொகை பொருளாளரிடம் இருந்தது.

**வருமான செலவினம்.**

சென்ற வருடத்துடன் ஒப்பிடும் இடத்து, இவ்வருடம் பெறப்பட்ட அன்பளிப்பு ரூபா 286456/99ஆல் அதிகரித்து உள்ளது. வைப்பு வட்டி ரூபா 17547/02ஆல் குறைந்துள்ளது. மணிமண்டபத் திருப்பணி வரவு 1282600/- பெறப்பட்டுள்ளது. உணவுச்செலவு ரூபா 66190/50 அதிகரித்துள்ளது. அன்பளிப்பு ரூபா 123490/50 குறைந்துள்ளது. பெறுமானத் தேய்வு ரூபா 281709/10ஆல் அதிகரித்துள்ளது. இதற்கு இவ்வருட மணிமண்டப பெறுமானத் தேய்வே காரணமாகும்.

மேற்படி காரணங்களால் சென்ற வருடத்துடன் ஒப்பீடும் இடத்து இவ்வருட வருமானச் செலவுக் கணக்கு மீதி ரூபா 1101107/96 இல் அதிகரித்துள்ளது என்பது அவதானிக்கத்தக்கது.

தங்கள் நன்றியுள்ள

**கா. சிவசுப்பிரமணியம்** — முகாமையாளர்

**ச. செல்வேந்திரா அன் கோ** — பட்டயக் கணக்காளர்

யாழ்ப்பாணம்.
09-07-1999

உ

# 31 - 12 - 1998இல் உள்ள ஐந்தொகை

| | | |
|---|---|---|
| **பொது நிதி :** | | |
| 01-01-1998இல் உள்ள மீதி | 5265201-65 | |
| வருமானச்செலவுக் கணக்கு மீதி | 1977531-87 | 7242733-52 |
| **அறக்கட்டளை நிதி குறிப்பு - 1** | | |
| 01-01-1998இல் மீதி | 1769000-00 | |
| இவ்வருட அன்பளிப்பு குறிப்பு 2 | 230000-00 | 1999000-00 |
| | | 9241733-52 |
| **சொத்துக்கள் :** | | |
| நிலையான சொத்துக்கள்-குறிப்பு 3 | 4230916-54 | |
| நிலையான சேமிப்பு வைப்புக்கள் குறிப்பு 4 | 4454184-56 | 8685091-10 |
| **நடைமுறை வைப்புக்கள் :** | | |
| இலங்கை வங்கி சுன்னாகம் க/கு இல. 4923 | 71298-56 | |
| இலங்கை வங்கி பம்பலப்பிட்டி க/கு இல. 0037-01-0004020-4 | 377642-30 | |
| வர்த்தக வங்கி யாழ்ப்பாணம் க/கு இல. 12977 | 69481-66 | 518422-52 |
| கையிருப்பு | | 38209-90 |
| | | 9241733-52 |

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் நிதி நடவடிக்கைகள் சரியான முறையில் மேலே காட்டப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

**தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.**
தலைவர்

**அ. சண்முகநாதன்**
தனாதிகாரி

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் *31-12-1998*இல் உள்ள ஐந்தொகை, அதே திகதியில் முடிவுற்றாண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, பெறுவனவுக் கொடுப்பனவுக் கணக்கு என்பன எமக்குத் தரப்பட்ட ஏடுகள், ஆவணங்கள், தகவல்கள் பரிசீலனை செய்து தயாரித்துள்ளோம். இவை எமக்குத் தரப்பட்ட ஏடுகளின்படியும் இதே திகதியிலுள்ள எமது அறிக்கைக்கமையவும் சரியாகவுள்ளன என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

**கா. சிவசுப்பிரமணியம்**
முகாமையாளர்

**ச. செல்வேந்திரா அன் கோ**
பட்டயக் கணக்காளர்

யாழ்ப்பாணம்.
*09-07-1999*

உ

# 31-12-1998இல் முடிவுற்றாண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| அன்பளிப்பு | 1882506-35 | | |
| தேவஸ்தான அன்பளிப்பு | 240000-00 | | |
| வட்டி - குறிப்பு - 5 | 668227-19 | | |
| அன்னதான வரவு | 10185-00 | | |
| திருப்பணி வரவு | 1282600-00 | | 4083528-54 |
| **செலவினம்** | | | |
| உணவு | | 438244-50 | |
| கல்வி | | 54085-00 | |
| மருத்துவம் | | 8206-00 | |
| சம்பளம் | | 156000-00 | |
| போக்குவரத்து | | 24250-00 | |
| பரிசளிப்பு விழா செலவு | 62411-50 | | |
| பரிசளிப்பு விழா வரவு | (1585-00) | 60826-50 | |
| அன்பளிப்பு குறிப்பு - 6 | | 48445-00 | |
| உடை | | 31482-00 | |
| நிர்வாகச் செலவு | | 34965-00 | |
| விறகு எரிபொருள் | | 62047-87 | |
| நடராஜர் கோயில் | | | |
| திருப்பணிச் செலவு | 349753-00 | | |
| பாலஸ்தானம் | 9325-00 | | |
| கும்பாபிஷேகம் | 31715-50 | 390793-50 | |
| சேம உதவு தொகை | | 14244-00 | |
| தீபாவளிச் செலவு | 45190-00 | | |
| வரவு | (23000-00) | 22190-00 | |
| புதுவருடப்பிறப்புச் செலவு | | 23335-00 | |
| நல்லூர் மணிமண்டப செலவு குறிப்பு - 7 | | 294795-21 | |
| கணக்காய்வுக் கட்டணம் | | 10000-00 | |
| ஏனைய செலவு குறிப்பு 7 | | 88997-00 | |
| பெறுமானத் தேய்வு | | 343090-09 | 2105996-67 |
| | | | 1977531-87 |

# 31-12-1998இல் முடிவுற்றாண்டிற்கான பெறுவனவுக் கொடுப்பனவுக் கணக்கு

**ஆரம்ப இருப்பு :**

| | | |
|---|---|---|
| நிலையான சேமிப்பு வைப்புக்கள் | 4466201-53 | |
| நடைமுறை வைப்புக்கள் | 438550-51 | |
| கையிருப்பு | 45955-48 | 4950707-52 |

**பெறுவனவுகள்**

| | | |
|---|---|---|
| அன்பளிப்பு | 1882506-35 | |
| அறக்கட்டளை அன்பளிப்பு | 230000-00 | |
| தேவஸ்தான அன்பளிப்பு | 240000-00 | |
| தேவஸ்தான அன்பளிப்பு (மணி மண்டப திருப்பணிக்காக) | 1282600-00 | |
| வட்டி | 668237-19 | |
| அன்னதான வரவு | 10185-00 | |
| தீபாவளி வரவு | 23000-00 | |
| நானாவிதம் | 1050-00 | |
| பரிசளிப்பு விழா | 1585-00 | |
| கோசாலை வரவு | 4730-00 | 4343893-54 |
| | | 9294601-06 |

**கொடுப்பனவுகள்**

| | |
|---|---|
| உணவு | 438244-50 |
| மருத்துவம் | 8206-00 |
| கல்வி | 54085-00 |
| சம்பளம் | 134200-00 |
| போக்குவரத்து | 24250-00 |
| புதுவருடப் பிறப்பு | 23335-00 |
| பரிசளிப்பு விழா | 62411-50 |
| அன்பளிப்பு | 41015-00 |
| பாவனைப் பொருள் | 36728-50 |
| உடை | 31482-00 |
| நிர்வாகச் செலவு | 34965-00 |

| | | |
|---|---|---|
| நானாவிதம் . | 29393-00 | |
| பிள்ளைகளுக்கான அன்பளிப்பு | 7430-00 | |
| விறகு எரிபொருள் | 62047-87 | |
| விசேட கொடுப்பனவு | 21800-00 | |
| நடராஜர் கோவில் பாலஸ்தானம் | 9325-00 | |
| தீபாவளி | 45190-00 | |
| நடராஜர் கோவில் திருப்பணி | 349753-00 | |
| நடராஜர் கோவில் கும்பாபிஷேகம் | 31715-50 | |
| சேம உதவு தொகை | 14244-00 | |
| வங்கிக்கட்டணம் | 91-00 | |
| நல்லூர் மணிமண்டப திருப்பணி | 2785307-71 | |
| கணக்காய்வுக் கட்டணம் | 10000-00 | |
| கோசாலைப் பராமரிப்பு | 28564-50 | 4283784-08 |

**இறுதியிருப்புக்கள்**

| | | |
|---|---|---|
| நிலையான சேமிப்பு வைப்புக்கள் | 4454184-56 | |
| நடைமுறை வைப்புக்கள் | 518422-52 | |
| கையிருப்பு | 38209-90 | 5010816-98 |
| | | 9294601-06 |

**குறிப்பு 01**

**அறக்கட்டளை நிதி**

| | |
|---|---|
| உணவு நிதி | 644000-00 |
| கல்வி நிதி | 355000-00 |
| சமயப்பணி நிதி | 60000-00 |
| புதுவருட நிதி | 15000-00 |
| பரிசளிப்பு நிதி | 40000-00 |
| தீபாவளி நிதி | 225000-00 |
| பொதுச் செலவு நிதி | 660000-00 |
| | 1999000-00 |

**குறிப்பு 02**

**அறக்கட்டளை நிதி அன்பளிப்பு**

| | |
|---|---|
| திரு. கு புவனேந்திரன் | 25000-00 |
| திருமதி சி. நாகேஸ்வரி | 50000-00 |
| திருமதி இராசரத்தினம் | 20000-00 |
| செல்வி சி. லங்காதேவி | 25000-00 |
| திருமதி நாகேந்திரா சரஸ்வதி | 10000-00 |
| Dr. கனகசபை குடும்பம் | 100000-00 |
| | 230000-00 |

**குறிப்பு 05**

**வட்டி**

| | | |
|---|---|---|
| நிலையான வைப்பு வட்டி | | 648119-61 |
| சேமிப்பு வைப்பு வட்டி | | |
| க/கு இல. 1015 | 3414-99 | |
| ,, ,, ,, 769 | 9043-08 | |
| ,, ,, ,, பி. எஸ். 1 | 7659-51 | 20117-58 |
| | | 668237-19 |

**குறிப்பு 06**

**அன்பளிப்பு**

| | |
|---|---|
| மரணக்கிரிகை அன்பளிப்பு | 6000-00 |
| திருமண அன்பளிப்பு | 14500-00 |
| இராமநாதன் கல்லூரி | 10000-00 |
| பிள்ளைகட்கான அன்பளிப்பு | 7430-00 |
| ஏனையவை | 10515-00 |
| | 48445-00 |

**குறிப்பு 07**

**நல்லூர் மணிமண்டபச் செலவு**

| | |
|---|---|
| திறப்பு விழாச் செலவு | 78549-60 |
| மண்டபப் பராமரிப்பு செலவு | 53402-40 |
| சோலை வரி | 1582-71 |
| சிறுகுடில் செலவு | 18335-00 |
| விசேட தினச் செலவு | 26048-50 |
| பொது உபசாரச் செலவு | 10236-00 |
| போக்குவரத்துச் செலவு | 8050-00 |
| திருமணச் செலவு | 98591-00 |
| | 294795-21 |

**குறிப்பு 08**

**ஏனைய செலவு**

| | | |
|---|---|---|
| பாவனைப் பொருள் | | 36728-50 |
| நானாவிதம் | | 29393-00 |
| வங்கிச் செலவு | | 91-00 |
| கோசாலைப் பராமரிப்பு | 28564-50 | |
| ,, வரவு | (4730-00) | 23834-50 |
| | | 90047-00 |
| நானாவித வரவு | | (1050-00) |
| | | 88997-00 |

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.